1980 ஜூலை 31]

குத்தகைக்கு விடவேண்டும் என்ற நிலை இருக்கிறது. ஆகவே மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மீன் வளத்தைப் பெருக்குவதற்கென, முயற்சிகளில் ஈடுபடுவதுதான் நலன் பயப்பதாக அமையும்.

திரு. க. பாலசுப்பிரமணியன் : தலைவரவர்களே, இடைப்பாடி பகுதியில் மீன் வளர்க்கின்ற திட்டம் புதிதாக எதுவும் இல்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். கடந்த காலங்களில் பல ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள குளங்களுக்கு அதிகமான பணம் செலவு செய்யப்பட்டு சிமெண்ட் தரைகள் போடப்பட்டிருக்கின்றன. அவைகள் எல்லாம் பயன்படுத்தப்படாமல் வீணே கிடக்கின்றன. ஆகவே மீண்டும் அந்தக் குளங்களை நல்ல முறையில் செப்பனிட்டு அதிலே மீன் வளர்ப்பு திட்டத்தைக் கொண்டுவர அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதுபற்றிய செயற்குறிப்பு என்னிடத்திலே இல்லை. தனிக் கேள்வி போட்டால் விளக்கமாகப் பதில் தரப்படும்.

அருள்மிகு அதிதீஸ்வரர் ஆலயம், வாணியம்பாடி.

*வினா எண். 80— திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி–அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) வாணியம்பாடி அருள்மிகு அதிதீஸ்வரர் ஆலயத் திருப்பணி செய்யும் திட்டம் ஏதும் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :

(அ) & (ஆ) வாணியம்பாடி அருள்மிகு அதிதீஸ்வரர் கோயிலுக்குத் திருப்பணி செய்யும் பொருட்டு திருப்பணிக்குழு அமைக்க வேலூர் உதவி ஆணையாளரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்தாலே அடுத்த ஆண்டில் நிச்சயமாக திருப்பணி நடைபெற்று விடும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. வாணியம்பாடி அருள்மிகு அதிதீஸ்வரர் ஆலயம் மட்டுமல்லாமல், மற்ற தமிழக கோவில்கள் அனைத்திலும், திருப்பணி செய்கிற நேரத்தில் பெரும்பாலான மக்கள் செல்கிற இடம் என்ற கருத்தை மனத்தில்

கொண்டு, நல்ல சிற்பக் கலைஞர்களை அழைத்து சிலை செதுக்க வேண்டும். நாம் குடும்பத்தோடு கோவிலுக்கு போகிறபோது, குழந்தைகளுக்கு ஒவ்வொரு சாமியாக காட்டி, விளக்கிக் கொண்டு வரும்போது, 'சாமி என்ன இப்படி இருக்கிறது' என்று கேட்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சாமியைப் பற்றிய விளக்கங்கள் வேண்டாம். உரையாக நிகழ்த்துவதை தவிர்த்து, கேள்வியாக கேட்க முற்படுங்கள்.

திரு. இரா. தாமரைக்கனி : ஆகவே சிற்பக் கலைஞர்களைக் கொண்டு, திருப்பணிகள் செய்யும் நேரத்திலாவது, கோவிலில் இருக்கும் சிலைகளுக்கு ஆடைகள் அணிவிக்கும்படியான நடவடிக்கையை அரசு எடுத்துக் கொள்ள முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக் கனி அவர்கள் ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தவர். ஆனால் அவர் வாணியம்பாடி தொகுதியில் இருக்கிற ஒரு கோவிலைப் பற்றி வெகு அக்கறையாக கேள்வி கேட்டார். நானும் பதிலைச் சொன்னேன். அதுவுமல்லாமல் அவர் பல்வேறு கருத்துக்களையும் தெரிவித்திருக்கிறார்கள். அதை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்திலே சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் வருகிறபோது, தெரிவித்தால் அவர்கள் அதை பரிசீலனை செய்வார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ந. குலசேகர பாண்டியன் : பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வாணியம்பாடி தொகுதியிலே உள்ள அந்தக் கோவில் மிகவும் பிரசித்தி வாய்ந்த கோவில் என்று சொல்லப்படுகிறது. அதிலிருக்கும் பழங்காலச் சின்னங்கள் அழிந்து போய்க் கொண்டிருக்கிறது. அதனால் விரைவாக திருப்பணிக் குழு அமைப்பது மட்டுமல்லாமல், திருப்பணியை பெரிய அளவில் நடத்துவதற்கும் அரசு ஆவன செய்யுமா? அதற்கான மதிப்பீடுகள் ஏதாவது அரசுக்கு வந்திருக்கிறதா என்றும் அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆலயத்தின் ஆண்டு வருமானமே 3855 தான், அந்தத் தொகையை வைத்துக் கொண்டு அன்றாடம் நிர்வாகச் செலவு, பூஜை, நைவேத்திய செலவுகளை நிர்வகிப்பதே மிக கடினமாக உள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்பியது போல், மிகப் பெரிய அளவில் திருப்பணி செய்வதனால், பொது மக்களிடமிருந்து நன்கொடைகள் வசூல

1980 ஜூலை 31]

செய்து மேற்கொள்ள முடியுமா என்பதைப்பற்றி பரிசீலனை செய்து திருப்பணிக் குழு அமைக்கலாம் என்று உதவி ஆணையாள ருக்கு அனுமதியை அறநிலையத் துறை வழங்கியிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கன்னியாகுமரியை சுற்றுலா மையமாக மேம்படுத்தல்.

*வினா எண் 81—திரு. சு, முத்துக்கிருஷ்ணன் : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

கன்னியாகுமரியை சுற்றுலா மையமாக மேம்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : கன்னியாகுமரிக்கு வருகை தரும் குறைந்த வருவாய்ப் பிரிவு பயணிகளுக்கு தங்கு மிட வசதிகள் மிகக் குறைவாக உள்ளதால், துயிலக விடுதி ஒன் றினை ரூ. 5·00 இலட்சம் செலவில் 1980-81 ஆம் ஆண்டில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், ரூ. 1·00 இலட்சம் செலவில் புதிதாக ஒரு சுற்றுலா அலுவலகம் அமைக்க உத்தேசிக் கப்பட்டுள்ளது. கன்னியாகுமரியை ஒரு சிறந்த உலகச் சுற்றுலா மையமாக மேம்படுத்த வேண்டும் என்ற உத்தேசத்தில் அரசு, டாக்டர் ஜே. கிருஷ்ணசுவாமி அவர்களை ''பெருந்திட்ட அறிக்கை (Master Plan)'' ஒன்று தீட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டுள்ளது. அவர்களின் திட்ட அறிக்கை கிடைத்த பின் மேல் நடவடிக்கை குறித்த திட்டங்கள் (Schemes) நிறை வேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே. கன்னியாகுமரி, உள்நாட்டு பயணிகளும் வெளி நாட்டு பயணிகளும் அதிகமான அளவில் வருகிற ஒரு சுற்றுலா பிரதேசம். ஆகவே மத்திய அரசிடம் சொல்லி அங்கே ஒரு விமான தளம் அமைக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன். அடுத்து, மியூசியம். அக்குவேரியம் போன்ற வைகளையும் கன்னியாகுமரியில் அமைக்க நடவடிக்கை எடுக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டுதோறும் 10,000 வெளிநாட்டு பயணிகளும் 5 லட்சம் உள் நாட்டு பயணிகளும் கன்னியாகுமரிக்கு வருகிறார் கள் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. அதை ஒட்டி அங்கே பல் வேறு சிறப்பான திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்று அரசு உத்தேசித்துள்ளது. ஆனால் விமான தளம் அமைப்பதைப் பற்றி சொல்ல வருகிறபோது, அருகிலேயே திருவனந்தபுரத்தில்